# நிரந்தர வெற்றியும் தேவையான அறிவும்

**பாத்திமா ரிப்தா** (B.Com SL)
லெஸ்டர்,
ஐக்கிய இராச்சியம்

சிறு குழந்தைகள் சிரித்துக் கொண்டே கொழுந்து விட்டு எரியும் நெருப்பை நெருங்கக் கூடும். அவ்வாறே ஊர்ந்து வரும் விசப்பாம்போடு விளையாடக் கூடும். கண்ணில் பட்டதை வாயில் போடக் கூடும். ஏன் இப்படி செய்கிறார்கள் என்பதை மிகப் பெரிய ஆராய்ச்சி இன்றியே நாம் அறிந்திருக்கிறோம். ஆமாம், சிறு குழந்தைகளிடத்தில் தாம் செய்யக் கூடிய காரியங்கள் பற்றியோ,அவற்றின் ஆழ அகலங்கள் மற்றும் விளைவுகள், ஆபத்துகள் பற்றியோ எந்த அறிவும் விளக்கமும் இல்லாமையே இதற்குக் காரணமாகும். இதன் காரணமாக நாம் வாழும் இதே சூழல் அவர்களுக்கு மிகவும் ஆபத்தாகி விடுகிறது. பெற்றோர்களாகிய நாம் இந்தக் குழந்தைகள் அறிந்திராத இது போன்ற ஆபத்துகளில் இருந்து காப்பதற்காக எவ்வளவு பிரயத்தனம் எடுத்துக் கொள்கிறோம். (fire guards,corner protectors,carbon monoxide alarms, smoke alarm,window locks, drawer locks, thermometer,socket covers, safty gate ect..) தீ காவலர்கள், மூலையில் பாதுகாவலர்கள், கார்பன் மோனாக்சைடு அலாரங்கள், புகை அலாரம், ஜன்னல் பூட்டுகள், அலமாரி பூட்டுகள், வெப்பமானி, சாக்கெட் கவர்கள், பாதுகாப்பு வாயில் என பல்வகை பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் முழு நேரக் கண்காணிப்பு என அடுக்கிக் கொண்டே போகலாம்.

சிறுவர்களின் வாழ்வில் நேரடியாக தலையிட்டு



# அறிவு தேடுவதன் அவசியம்



அவர்களைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபடும் நாம் ஒரு வகையில் குழந்தைகளை ஒத்திருக்கிறோம். அதாவது, 'இந்த உலகம் மறுமைக் காண விலை நிலம்' என்ற அடிப் படையில், வளர்ந்தோராகிய எமக்கு , இந்த உலகில் எப்படி வாழ வேண்டும் என்ற வழிகாட்டல்களும் அறிவுறுத்தல்களும் எம்மைப் படைத்த இறைவனால் தரப் பட்டிருக்கும் நிலையில் அவற்றை அறிந்து பின்பற்றும் போதே, நாம் எதிர் கொள்ளவுள்ள ஆபத் திலிருந்து எம்மைக் காப் பாற்றிக் கொள்ள முடியும்.

இந்த உலகில் நமது செயல்களுக்கு ஏற்பவே மறுமையில் எமது வெற்றி தோல்வி அமையவுள்ளது. எனவே இந்த உலக வாழ்வில் எமது செயல்கள் மிக முக்கியத்துவம் பெறுவதோடு, உலக வாழ்வு ஆபத்து மிக்கதாகவும் காணப் படுகிறது.. எமது ஒவ்வொரு செயலுக்கும் உரிய விளைவு நிட்சயமாக உண்டு. அந்த விளைவு குறித்து நாம் மிக கவனமாக இருக்க வேண்டும். எமது செயல்களின் விளைவுகள் பற்றிய அறிவு எம்மிடத்தில் இல்லாமல் இருந்தால், நிட்சியமாக நாமோ மிகப் பெரிய ஆபத்தில் மாட்டிக் கொள்வோம். எனவே இந்த மிகப் பெரிய ஆபத்தில் இருந்து எம்மைக் காத்துக் கொள்வதற்கு எமக்கு அறிவு இருப்பது அவசிமாகின்றது.

# அறிவைத் தேடுவதன் சிறப்புகள்

அறிவைத் தேடுவதன் சிறப்புகள் பற்றிய பல ஆதாரங்கள் அல்குர் ஆனிலும் ஹதீஸிலும் நிறையவே காணப் படுகின்றன. அவற்றை கற்று அறிந்து அதன் படி நடப்பது மிக அவசியமாகும்.

'கல்வி கற்பது முஸ்லிமான ஆண், பெண் அனைவருக்கும் கட்டாயக் கடமையாகும்' (அல்- ஹதீஸ், புகாரி)

அறிந்தோரும், அறியாதோரும் சமமாவார்களா? நல்லுபதேசம் பெறுவோரெல்லாம் அறிவுடையோரே (அல்குர்ஆன் 39:9)

எம்மைப் படைத்த இறைவன் தான், எம்மை இந்த உலகுக்கு அனுப்பினான். இந்த உலகில் நாம் எப்படி வாழ வேண்டும் என்று எம்மை வழி நடத்தக் கூடிய வழிகாட்டலையும் எமக்குத் தந்தான். 'இந்த வழிகாட்டல் மூலம் என்ன கூறுகின்றான்?' என்ற அறிவைப் பெறத் தவறும் போது, எமக்கும் சிறு

## நிரந்தர வெற்றியும்: தேவையான அறிவும்

குழந்தைகளும் எந்த பாகுபாடும் இல்லை.

இந்த உலக வாழ்வில் மனிதர்களாகிய எமது இலட்சியம் எல்லாம் வல்ல அல்லாஹ்வை வணங்குவதாகும்.

மேலும் மனித இனத் தையும் ஜின் இனத் த்தையும் என்னை வணங்குவதற்காகவே அன்றி நான் படைக்கவில்லை. (அல்குர்ஆன் 51:56)

அல்லாஹ்வை வணங்குவது எமது வாழ்வின் அதி முக்கிய விவகாரமும் கூட. ஆயினும் நடைமுறையில் அதி முக்கிய விவகாரத்துக்கு நாம் கொடுக்கும் கவனமும் காலமும் மிக சொற்பமே. இன்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் வாழ்வு முறையைப் பார்க்கும் போது இறைவனை வணங்குதல் என்ற இலட்சியத்தை விட்டும் நாம் தூரமாகி நிரந்தரமற்ற உலகை அடைவதுவே இலட்சியம் என்பது போல் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

அன்புக்குரிய சகோதர சகோதரிகளே ! நாம் எம்மைப் பற்றி நன்கு சிந்திக்கக் கடமைப் பட்டுளோம்.

> “நிச்சியமாக நாம் அனைவரும் மறுமை நாளில் அல்லாஹ்வின் சந்நிதானத்தில் நிறுத்தப் படுவோம், எமது உலக வாழ்வின் விளைவு வெற்றியா ? தோல்வியா? சுவர்க்கமா? நரகமா? என அறிவிக்கப் படும் போது நாம் என்ன செய்யப் போகிறோம்? என்ன சொல்லப் போகிறோம்? இறைவா! ‘இவற்றை செய்வது என்மீது கடமையாக இருந்தது என்பதை நான் அறிய வில்லையே.’ ‘இவற்றை செய்யக் கூடாது, என்பது எனக்குத் தெரியாதே’ என்று காரணம் கூறி தப்பிக்க முடியுமா? நிச்சியமாக முடியாது.”

ஜின் வர்க்கமே மனித வர்க்கமே என்னுடைய வசனங்களை உங்களுக்கு ஓதிக் காண்பித்து உங்களுடைய இந்நாளின் சந்திப்பைப் பற்றியும் உங்களுக்கு அச்ச மூட்டி எச்சரிக்கை செய்யும் தூதர்கள் உங்களில் இருந்தே உங்களுக்கு வரவில்லையா (என்று கேட்பான்) (அல்குர்ஆன் 6:130)

அன்பான முஸ்லிம்களே! இந்த நிகழ்வு எமக்கு நிகழக் கூடாது.

நாம் இன்னும் உயிரோடு தான் இந்த உலகில் இருக்கின்றோம்.

இன்னும் தாமதமாக வில்லை. எமது மார்க்கத்தைப் படிப்பதற்கு நாம் உடனே முன்வர வேண்டும்.



# அறிவைத் தேடாதோர் முன்வைக்கின்ற சில போலிக் காரணங்களும் அவற்றின் யதார்த்தமும்

கடமையான அறிவைத் தேடுவதில் பொடுபோக்காக இருப்போரும் அதற்காக போலிக் காரணங்கள் கூறிக் கொண்டிருப்போரும் நம்மில் நிறையவே இருக்கின்றோம் என்பதை நாம் ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டும்.
இவ்வாறானோர் முன் வைக்கும் சில காரணங்கள் பின்வருமாறு இருக்கலாம்.

## எனக்கு நேரமில்லை

பொதுவாகவே பெற்றோர்கள், குறிப்பாக தாய்மார்கள் கூறாகக் கூடிய காரணம் ''பிள்ளைகள் என்றும் வீட்டு வேலைகள் என்றும் நாம் மிக பிஸியாக ஓய்வே இல்லாமல் சோளியாக உள்ளோம்.'' என்பதாகும்.

அன்பானவர்களே! சற்றே நிதானமாக சிந்தித்துப் பாருங்கள். எமக்கு ஒரு (டிக்ரீ மற்றும் இன்னோரன்ன) கல்வித் தகைமை வேண்டும் அல்லது ஒரு தொழில் வேண்டும் .இவற்றின் மூலமே நாம் உலகில் ஒரு வெற்றிகரமான வாழ்வை அமைத்துக்க் கொள்ள முடியும் என்ற சிந்தனையோடு இருக்கும் போது, எப்படியாவது ஓய்வே இல்லாத வேலைப்பளு என்று நாம் கூறக் கூடிய வேலைகளையும் முன்னுக்குப் பின்னுக்கு ஆக்கிக் கொண்டு எப்படியோ அந்த முக்கியமான விடயத்தை செய்யத் தான் செய்கிறோம். முழு நேரத் தாயாகவும் முழு நேர ஊழியராகவும் இருந்து கொண்டே கல்வித் தகைமைகளையும் தொழிலில் பதவி உயர்வுகளையும் அடைய முடியுமென்றால், ஏன் எம்மால் தியாகங்கள் புரிந்து, எமது வேலைகளை முன்னுக்கும் பின்னுக்கும் ஆக்கிக் கொண்டு மிக முக்கியமான அறிவை பெற்றுக்கொள்ள முடியாமல் உள்ளது?

இந்த உலகில் இறைவனை எப்பஜ வணங்க வேண்டும்? என்ற அறிவின் மூலம் மட்டுமே தவிர்க்க முடியாததும், இறுதியானதும், உறுதியானதுமான, மகிழ்ச்சி நிறைந்த, நிரந்தர தங்குமிடமான சுவர்க்கத்தை நாம் அடைய முடியும். இறைவனை எப்படி வணங்குவது என்ற கட்டாய அறிவைப் பெறாமல் காலத்தை விரயமாக்கிக் கொண்டிருப்பதை எப்படி நாம் ஏற்றுக் கொள்ள முடியும்? இங்கு நாம் இந்த உலகுக்கு முக்கியத்துவம் அளிப்பதன் மூலம் நிரந்தரமான சுவர்க்கத்தை இழப்பதைப் பற்றி எப்படி கவலையோ கரிசனையோ இல்லாமல் இருக்கலாம்?

## நான் குழப்பத்தில் இருக்கிறேன்

ஆமாம்: இது பிழை, அது சரி, அல்லது இது கூடாது, அது கூடும், இப்படி செய்ய வேண்டும், அப்படி செய்யக் கூடாது. என்று மக்கள் கூறும் போது நான் குழப்பிப் போயிருக்கிறேன். அதனால் எனக்குத் தெரிந்த இஸ்லாத்தை நான் செய்து கொண்டிருக்கிறேன். யாருடைய உபதேசமும் தேவையில்லை நானும் எனது வழியும் தாராளமாக போதும். இந்தக் குழப்பத்த்துக்கு அடிப்படைக் காரணம், 'நாம் அறிய வேண்டிய அம்சங்கள் பற்றிய அறிவை தேடாமல் இருப்பது தான்' என்பதை நாம் முதலில் உணர்ந்தாக வேண்டும். மார்க்கத்தை அறிந்து கொள்ளும் அளவுக்கு ஏற்ப, குழப்பம் குறையும் என்பது தான் உண்மை.

## தேவையான அறிவை பெற்றுக்கொள்ள போதிய நூற்களோ வளம்களோ இல்லையே என்கிறோம்

அன்பானவர்களே! நாம் வாழும் காலமோ நவீன தொழில் நுட்பங்கள் மலிந்த காலமாகும்.அதிலும் நாம் வாழும் மேற்குலகில் குறிப்பாக சகலரின் விரல் நுணியில் தேவையான அவசியமான அறிவுகள் குவிந்து கிடக்கின்றன. இந்த உண்மையை எப்படி நாம் மறுக்க முடியும். நமக்கு அவசியமான கல்வியைப் பெற்றுக் கொள்ள இவற்றை எப்படி பயன் படுத்தாமல் இருப்பது?

## நாம் மார்க்கத்தை அதிகமாக அறிந்து கொண்டால் அதிகமாக பின்பற்ற வருமே என்ற ஒருவகைப் பயம்

நமது சமூகத்திலே மிக தவறாக அறியப்பட்டுள்ள அம்சங்களிலே இது ஒரு முக்கிய விடயமாகும். அறிந்து கொள்ளாமல் இருப்பதையே ஒரு காரணமாக, சாட்டாக கூறும் அம்சமமனது மார்க்கத்தின் ஓர் அடிப்படையான அம்சத்தையே நாம் புரியத் தவறி விட்டோம் என்பதற்கு சான்றாகும். அதாவது தொழுகை எம்மீது கடமை



என்பதையும் தொழாத போது நாம் பாவம் செய்த பாவியாவோம் என்பதையும் விளங்கி வைத்துள்ள நாம், அறிவைத் தேடுவது கடமை அறிவைத் தேடாத போது நாம் பாவியாவோம் என்று விளங்கத் தவறி விட்டோம். அதாவது தொழாத பாவத்துக்கு தண்டனை நிச்சியம் உண்டு என்பதைப் போலவே அறிவு தேடாத பாவத்துக்கும் நிச்சியம் தண்டனை உண்டு என்பதை நாம் தெளிவாக நமது மூலையில் பதிந்தே ஆக வேண்டும்.

### அல்லாஹ் எனது உள்ளத்தில் இருக்கிறான். அது போதாதா? என்ற மனப்பாங்கு சிலரிடத்தில் காணப்படுகிறது

அன்பானவர்களே! அல்லாஹ் எம்மிடம் எதிர்பார்ப்பது அல்லாஹ்வை எமது உள்ளத்தில் வைப்பதை மாத்திரம் அல்ல. மாறாக 'எமது செயல்கள் யாவற்றுக்கும் நாம் அல்லாஹ்விடத்தில் கேள்வி கேட்கப்படுவோம்' என்ற நம்பிகையிக்கையையும் உள்ளத்தில் ஆழமாக இருத்திக் கொள்ள வேண்டும். நாம் மேற்கொள்ளக் கூடிய செயற்பாடுகள் சரியானதா? பிழையானதா? என்பது கூட தெரியாத அளவு தான் எமது அறிவு இருக்குமென்றால் அல்லாஹ் எமது உள்ளத்தில் இருப்பதால் நாம் எந்த வெற்றியையும் இந்த உலகிலேயோ மருமையிலோயோ அடைந்து கொள்ள மாட்டோம்.

### அல்லாஹ் மிகவும் அன்பாளன், அருளாளன்

அவன் எனது நிலையை நன்கு அறிவான். அவன் எனக்கு அன்பு காட்டுவான். என்று தவறான காரணம் காட்டுபவர்களும் நம்மில் இருக்கலாம். அல்லாஹ் அருளாளன் அன்பாளன் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் அதே அல்லாஹ் கடுமையாக தண்டிக்கக் கூடியவனும் கூட என்பதை நாம் அவதானிக்கத் தவறி விடுகிறோம். அல்லாஹ் எம்மீது கடமையாக்கியதை நாம் நிறைவேற்றாத போதும் நமக்கு செய்யத் தடை விதித்ததை நாம் செய்கின்ற போதும் அவனது தண்டனைக்கு உரியவராகி விடுகிறோம். அல்லாஹ் அருள்பாளிப்பான் என்ற எதிர் பார்ப்பு அவன் கடுமையாகத் தண்டிப்பான் என்றபயத்தோடும் இருப்பது மிக அவசியமாகும். எதிர்பார்ப்பை மாத்திரம் வைத் துக் கொண்டு எமது கடமையில் கவனம் இல்லாமல் இருப்பதை எந்த வகையிலும் நியாயப் படுத்த முடியாது.



### அறிவு போதாது

எமது பாடசாலையும் ,பள்ளி வாசாலும், மத்ரசாவும், எமது சமூக நிலையமும், ஆலிம்களும் தந்த அறிவு போதாது.' என்று குறை பட்டுக் கொள்வோரும் அல்லது அவை தந்த அறிவு போதாதா? என்று பெருமிதம் கொள்வோரும் நம்மில் பலர் இருக்கலாம்.

அன்பானவர்களே! எமது சொந்த வாழ்வில் ஒரு தொழில் பயிற்சி யைக் கற்கவோ, வாகனம் ஓட்டக் கற்கவோ, பதவி உயர்வுக்காக மேலதிக தகைமைகளைத் தேடிக் கற்கவோ நாம் விரும்பும் போது, இப்படி எந்தக் காரணத்தையும் கூறிக் கொண்டிருப்பதில்லையே?

நேரம், காலம், பணம் என பல வகைத் தியாகங்களை செய்து, எப்படியாவது கற்று முன்னேறி விட வேண்டும் என்பதில் பிடிவாதமாக இருக்கிறோம். இதே தியாகங்களை அறிவைத் தேடும் விடயத் தில் நாம் செய் யாமல் இருந்து கொண்டு யாரையும் குறை கூறிப் பலனில்லை.

அல்லாஹ் எந்த ஒரு சமுதாயத்தில் இருப்பதையும் அவர்களாகவே மாற்றிக் கொள்ளாத வரையில் நிச்சியமாக மாற்றி விடுவதில்லை. (அல்குர்ஆன் 13:11)

அறிவைத் தேடுதல் என்ற மாற்றத்தின் மூலம் எம்மில் இருக்கின்ற அறியாமையை போக்குவதற்கு நாம் தயாராகாத வரையில் அல்லாஹ் எம்மில் மாற்றத்தைக் கொண்டு வர மாட்டான் என்பதை நாம் அறிந்து கருமமாற்ற கடமைப் பட்டுள்ளோம். உலகை அடைந்து விட வேண்டும் என்பதில் காணப்படும் கவலையும் கரிசனையும் இங்கே அறிவைத் தேடுவதிலும் இருப்பது அவசியம். இவ்வாறு செய்யாத போது நாமே நம்மை மிகப் பயங்கரமான இறுதி விளைவை நோக்கி வழி நடத்துகிறோம் என்பதே மிகவும் உறுதியான உண்மையாகும். மேலே நாம் பார்த்தது போன்ற காரணங்களால், நாம் எம்மைத தான் ஏமாற்றிக் கொள்கிறோம். இதனால் நாம் எமது நிரந்தர தோல்வியை நோக்கி சென்று கொண்டிருக்கிறோம். இந்தப் போக்கு மிக ஆபத்தானது. நாம் முன் நோக்கிச் சென்று கொண்டிருக்கும் மிக மிக பயங்கரமான மீண்டும் சரிசெய்ய முடியாத தோல்வியில் இருந்து உடனடியாக வெளி வந்தாக வேண்டும். இதே நிலையில் நமக்கு மரணம் வந்து விட்டால் எமது நிலையோ மிகவும் ஆபத்தாகிவிடும்.

'மேலும் எவர் எம்முடைய உபதேசத்தைப் புறக்கின்றாரோ, நிச்சியமாக அவருக்கு நெருக்கடியான வாழ்க்கையே இருக்கிறது' (அல்குர்ஆன் 20:124)

பிள்ளைகள் வளரும் வரை அவர்கள் அறிந்திராத ஆபத்துக்களில் இருந்து அவர்களைக் காத்து வந்தோம். நாமும் ஒரு வகையில் இவர்களை ஒத்துத்தான் இருக்கிறோம். உலக வாழ்வு, மறுமை வாழ்வு பற்றிய அறிவைப் பெறாமல் பெரும் ஆபத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறோம்.

## நாம் படிக்க வேண்டியவற்றின் வரிசையும் வழிமுறைகளும்

### முதலில் கற்க வேண்டியது அடிப்படை இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாடு

அறிவு கற்பது கடமை என்பதை ஏற்றுக் கொண்ட நாம் முதலில் கற்க வேண்டியது ஒவ்வொரு தனி நபரின் மீதும் கடமையாக இருக்கின்ற அம்சங்களாகும். அதன் வரிசையில் முதலில் அடிப்படை இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாடு பற்றிய அறிவைப் பெறுவது எமது கடமையாகும்.

ஆணீவே (நபியே) நிச்சியமாக அல்லாஹ்வைத் தவிர வணக்கத் துக் குரிய வேறு நாயன் இல்லை என்பதை நீர் அறிந்து கொள்வீராக. (அல்குர்ஆன் 47:19)

ஒவ்வொரு தனி நபரின் மீதும் கடமையாக இருக்கின்ற (பர்ளு அய்ன்னான) அம்சங்க ளின் வரிசையில் மிக ஆரம்பத்தில் கற்க வேண்டிய அம்சம் இதுவாகும்.

எமது பெற்றோர், அல்லது ஆசிரியர் சொல்லித் தந்ததால் அல்லாஹ்வும் நபிகளாரும் குர்ஆனும் உண்மையாகும்' என நாம் புரிந்து வைத் திருந்தால் அது உறுதியான ஈமானகிவிட முடியாது. நம்பிக்கை கொள்ள வேண்டிய சகல அம்சங்க ளிலும் எந்த சந்தேகமும் இல்லாத அளவுக்கு எம்மிடம் தெளிவான அறிவு இருப்பது அவசியமாகும்.

உணர்வின் அடிப்படையிலேயோ கண் மூடித்தனமாகவோ அமைந்த நம்பிக்கையை இறைவன் ஒரு போதும் எம்மிடமிருந்து ஏற்றுக் கொள்ள மாட்டான். எனவே நாம் ஒவ்வொருவரும் அறிவு பூர்வமாக நம்பிக்கை கொள்வது அவசியமாகும். நம்பிக்கைக் கோட்பாட்டில் அடங்கும் அம்சங்களில் எந்த சந்தேகமும் இல்லாத அளவுக்கு எமது நம்பிக்கை பற்றிய அறிவு இருக்க வேண்டும். அல்லாஹ் ஒருவன் இருக்கிறான் என்பதையும், நபிகள் நாயகம் சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அல்லாஹ்வின் இறுதித் தூதர் என்பதையும், குர்ஆன் அல்லாஹ்வின் வார்த்தை என்பதையும், அறிவு பூர்வமாக நிறுவும் அளவுக்கு நாம் அறிந்திருக்க வேண்டும்.

### இரண்டாவது கற்க வேண்டியது: செயல்கள் தொடர்பான சட்ட திட்டங்கள்

ஒவ்வொரு தனி நபரும் தனது சொந்த வாழ்வில் தாம் செய் கின்ற சகல செயல்கள் தொடர்பான சட்ட திட்டங்களை அறிந்திருப்பது அவசியமாகும். தனி நபரின் மீதும் கடமையாக இருக்கின்ற கட்டாயம் நிறைவேற்ற வேண்டிய பர்ளுகள் (பர்ளு அய்ன்) பற்றிய அறிவைப் பெறுவது கட்டாயமாகும்.

உதாரணமாக : தொழுதல், நோன்பு பிடித்தல், ஹஜ் செய்தல், சக்காதுக் கொடுத்தல்,

## நிரந்தர வெற்றியும்: தேவையான அறிவும்

இஸ்லாமிய முறைப் படி ஆடை அணிதல், ஆண் பெண்களுக்கிடையிலான உறவு பற்றி இஸ்லாம் கூறும் வழிகாட்டுதல், பிள்ளைகள் விடயத்தில் பெற்றோரின் பொறுப்புக்கள்,சலாம் கூறுதல் , கொடுக்கல் வாங்கல், வாங்கல் விற்றல் தொடர்பான சட்டங்கள், பற்றி கட்டாயமாக அறிந்திருக்க வேண்டும். இதே போன்று கட்டாயம் தவிர்ந்து கொள்ள வேண்டிய பொய், புறம், அபாண்டம், கோல் பேசுவது, தொடர்பான சட்டங்கள், மது சூதாட்டம் விபச்சாரம் களவு வட்டி தொடர்பான சட்டங்கள் பற்றிய அறிவைப் பெறுவதும் தனி நபர் மீது கடமை யாகும். மேலும் மனைவி கணவன் என்ற அடிப்படையில் அவர்களது பொறுப்புக்கள் என்ன?

தாய், ஆசிரியை வியாபாரி என்ற அடிப்படையில் அவர்களது பொறுப்புக்கள் என்ன ? இவை பற்றிய அறிவு இல்லாமல் அடுத்தவர்கள் வாழ்வது போல், உண்ணுவது உறங்குவது உலகை வலப் படுத்துவது என வாழ்ந்து விட்டு ஒரு போதும் நாம் வெற்றியடைய முடியாது. இதனை அல்லாஹ்வும் ஒரு போதும் ஏற்றுக் கொள்ள மாட்டான்.

### மூன்றாவதாக கற்க வேண்டியது: விரும்பத்தக்க அம்சங்கள்.

மார்க்க சட்டங்களுக்குரிய ஆதாரங்கள் என்ன என்பதை அறிந்திருப்பது இந்த வகை அறிவைச் சாரும். நபிகளாரின் வரலாறு, சகாபாக்களின் சரிதை, குர் ஆன் விளக்கம் ஹதீஸ் விளக்கம் ஆகியனவும் இதில் அடங்கும். மார்க்க அறிவை அதிகமாக அறிந்திருப்பதட்கு ஏற்ப மார்க்கத்தை நடைமுறைப் படுத்துவது இலகுவாக இருக்கும் என்ற விடயம் இங்கு கவனத்தில் கொள்ளப் பட வேண்டும்.

எழுதக் கூடிய நானும் வாசிக்கக் கூடிய நீங்களும் எமது கால நேரத்தை வீணாக்காமல், கடமையான அறிவு தேடுவதை உடனடியாகவே ஆரம்பிக்க வேண்டும். எமது வாழ்நாளில் இன்னும் எத்தனை நாட்கள் எஞ்சியுள்ளன என்பதை நாம் அறிய மாட்டோம். அல்லாஹ்வுக்காக் என்ற தூய்மையான எண்ணத்தோடு அறிவைத் தேடிக் கற்று, அதன் படி இந்த உலகில் வாழ்ந்து, மரணிப்பதன் மூலம் மாத்திரமே நிரந்தர வெற்றியை நாம் அடையலாம். அந்த வெற்றியானது, எந்தக் கண்ணும் கண்டிராத, எந்தக் காதும் கேட்டிராத, எந்த உள்ளமும் கற்பனை செய்திராத சுகமான சுவர்க்கமாகும்.

முற்றும்

Ad